# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **009/ந/2018**

ஆணை எண். **11/2018**

நாள் : **12/01/2018**

திரு K. மாணிக்கம்,
மேட்டூர் அணை – 1.

– முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
மேட்டூர் நகராட்சி.

– எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை– I, கூலி லைன், எப். பிளாக்–10 முகவரியில் வசிக்கும் திரு K. மாணிக்கம் அவர்களின் 05.01.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 08.01.2018 அன்று பெறப்பட்டு, 9/ந/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் மற்றும் அவர் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை– I, கூலி லைன், எப். பிளாக்–10 முகவரியில் வசிக்கும் திரு K. மாணிக்கம் என்பவர் மேட்டூர் நகராட்சியில் உதவியாளர் பதவியிலிருந்து 30.04.2007–இல் பணி ஓய்வு பெற்ற தனக்கு, 10.02.2011 நாளிட்ட நிதித்துறை அரசாணை எண்.45–ன்படி திருத்தியமைக்கப்பட்ட ஊதிய விகிதம் ரூ.5,200–20,200 + 2,800/–இன் படி ஊதியத்தை 01.01.2006 முதல் கருத்தியலாகத் திருத்தி நிர்ணயம் செய்தும், 01.02.2011 முதல் நிலுவை ஓய்வூதியம் மற்றும் இறப்பு மற்றும் ஓய்வு கால பணிக்கொடை வழங்க ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரரின் முறையீடு சம்பந்மாக 09.02.2017 நாளிட்ட கடித எண்.529/F1/14–இல் நகராட்சி ஆணையர் உரிய கருத்துருவினை சென்னை, உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரகத்திற்கு அனுப்பியுள்ளார். மேற்குறிப்பிட்ட கருத்துரு சம்பந்தமாக உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரகத்தின் ஒப்புதல் பெற்ற பின் திருத்திய ஓய்வூதியப் பலன்கள் வழங்கப்படுவதற்கான நடவடிக்கையினை மேட்டூர் நகராட்சி ஆணையரால் மேற்கொள்ளப்படும் என்பதால் மேட்டூர் நகராட்சி ஆணையரைத் தொடர்பு கொள்ளுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

**2018–** ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், **12–**ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப் பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. K. மாணிக்கம்,
   கூலி லைன், F பிளாக்–10,
   **மேட்டூர் அணை –1, அஞ்சல்,**
   **சேலம் மாவட்டம் – 636 401.**

2. **நகராட்சி ஆணையாளர்,**
   **மேட்டூர் நகராட்சி,**
   **மேட்டூர்.**

**நகல் :** முறைமன்ற நடுவரின் **நேர்முக எழுத்தர்**
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
**இ.கோ. / உதிரி**